# 1.பாட்டு வைக்கப் போறோம்!

தகிட தகிட தாளம் இது தஞ்சாவூரு மேளம்;
கிட்ட வந்து பாரு மெட்டு போட்டு கேளு!
வெட்டி பேச்சு வேணாம் விவரம் என்ன சொல்லு
பட்டுக்கோட்டைப் போறோம் பாட்டு வெக்கப் போறோம்!
எட்டு ஊரு கேட்கும் எங்க பாட்டு தாளம்!

பாட்டு என்ன பாட்டு பாகவதரு பாட்டா?
பழந்தமிழன் கேட்ட ஆய்ச்சியர்கள் கூத்தா!

நாலு பேரு சேர்ந்து நண்பர்களாய் ஆனோம்;
பாட்டு கட்டி நாங்கள் பாடஞ்சொல்ல போறோம்!
புத்தம் புதுக் கதைகள் வைத்துச்/புகுத்திச் சொல்ல போறோம்!
(....தகிட தகிட....)

நண்பரென்று சோல்லி நாலு பேரு சேர்ந்து;
வேலை வெட்டி இல்லா வெட்டிக் கதை நட்பா?
ஊரைச் சுற்றி வந்து போடுறதோ ஆட்டம்!

நாங்கள் பாடும் பாட்டு நானிலத்தை மாற்றும்;
நல்ல கதை கேட்டு மக்கள் நிலை மாறும்/தேறும்!
(....தகிட தகிட..)

அப்பன் காசில் ஊரைச் சுற்றும் அர்த்தமில்லாக் கூட்டம்;
நட்பு என்று சொல்லி நாளைக் கடத்தும் பாரு!
நாயர் கடை டீயில் பன்னை நனைச்சு தின்னு;
போறவர பொன்னைப் பார்த்து புகைய சுருள விட்டா,
நட்பு என்ற பேரா நல்லா கதைய கேளு!
(....தகிட தகிட....)

----கவிவளவன்

26-03-2009

## 2.மருதை போவோமா?

மாட்டு வண்டியிலே மருதைப் போவோமா?
கூட்டு வண்டியிலேச் சேர்ந்துப் போவோமா?
காட்டு வழியில்லை கள்ளர் பயமில்லை!
பாட்டுப் பாடுவோம்! பேசி மகிழுவோம்!

கண்ணன் வாரானோ! கண்ணன் வாரானோ! – அந்த
அழகுக் கண்ணன் வாரானோ!
தள்ளி நில்லுங்க! தள்ளி நில்லுங்க!
கிள்ளிப் போவானே! மனசைக்
கிள்ளிப் போவானே! (மாட்டு வண்டியிலே..)

-வேறு-

அழகன் அங்கே வாரான் பாரு!
அழகாய்த்தானே வாரான் பாரு!
தோழன் போலே நிப்பான் பாரு!
தொடர்ந்து அன்பைத் தருவான் பாரு! (மாட்டு வண்டியிலே..)

வள்ளல் தானுங்க! – அவன்
வள்ளல் தானுங்க!
ஆளும் மனத்தில் வாழுகின்ற,
வள்ளல் தானுங்க! (மாட்டு வண்டியிலே..)

முள்ளும் குத்தாது! முகமும் வாடாது!
துள்ளி மகிழுங்க! துள்ளி மகிழுங்க!
துவண்டு போகாது துள்ளி மகிழுங்க! (மாட்டு வண்டியிலே..)

மனதிலுள்ள துன்பம் போகும்!
மகிழ்ச்சியாக நாளும் போகும்!
அறிவும் ஆற்றலும் சிறப்பாக,
ஆனந்த வாழ்வே நிலையாகும்!

- **கவிஞர் கவிவளவன்** 10-10-2021

# 3.மனமே அறிவாய்!

போனால் உயிரும் வராது - அது
போகுமிடம் யாருக்கும் தெரியாது!
தானாய் வந்ததும் இல்லையடா - அது
தங்குவது என்றும் இல்லையடா!

வீணே பிறக்கும் ஆணவமும்,
விழுதாய் உயிருடன் பின்வருமோ!
ஆணையிட்டால் நடத்திவிட,
அடுத்து எதுதான் துணையுண்டு?

( ...போனால்)

ஆயிரம் பிறைகள் கண்டாலும்;
அடுத்து ஒருநாள் பிரிந்து விடும்!
உயிருக்கு ஏது அடையாளம்?
உன்மத்த உடலே கலனாகும்!

( ...போனால்)

உலகில் யாவையும் நேசித்தால்,
உன்னதமாகும் வாழ்நாளே!
நாளை யென்பதை யாரறிவார்?
நல்லதை எண்ணி மனந்திருந்து!

(..போனால்)

அல்லவை எல்லாம் புறந்தள்ள;
அறிவால் உண்மைத் துலங்கி விடும்!

(..போனால்)

**கவிவளவன்** 01-12-2019 - 2 PM

## 4.மெட்டுக்கு

மெட்டுக்குப் பாட்டெழுதும் மேலான வேலையிலே - இங்கே
முட்டிமுட்டி வேகுறாங்க முன்நூறு கவிஞருங்க
காலமது போதலையோ கற்பனைதான் ஊறலையோ
தாளத்துக்குள் நின்னுகிட்டு ததிகினதோம் போடுறாங்க

(மெட்டுக்கு...)

ஏறாத மடையிலேயும் ஏழுகண்ணி பாய்ச்சிடலாம் சேராத
ராகத்துலே கூடாத தாளத்துக்கு பாட்டெழுதி
கேட்குமொரு பரிதாப நிலையுமாச்சு

(மெட்டுக்கு...)

சொற்களுக்கு பஞ்சம் வந்து சொக்கி நிற்கும் கவிஞருங்க
இல்லாத சொற்களையும் எழுதிவிட்டு போறாங்க ஷக்கலக்க
கலக்கலா சிக்கிமுக்கி தவித்தலா

(மெட்டுக்கு...)

காலமிது மாறிடுமோ - இந்தக் கவிஞர் குலம் தேறிடுமோ

**-கவிவளவன் (12-05-2001)**

# 5.ஆணவம் அழித்துவிடும்....!

ஆணவம் மனிதனை அழித்து விடும்
ஆயிரம் சிறகுகள் இருந்தாலும்; – அந்த
ஆணவம் மனிதனை அழித்து விடும்!

'தான்' என நினைப்பான் தனிமனிதன்!
தருமத்தில் அவனே தலைவன் என்பான்!
உலகத்தின் ஒளியே அவன் என்பான்!
உண்மைகள் தோறும் நான் என்பான்

..(ஆணவம்..)

ஆணவம் தலையைச் சாய்த்துவிடும்;
அடுத்துச் சிலநாள் மூழ்கவிடும்!
போனவை யாவும் புதைந்து விடும்;
பொருட்கள் இல்லா நிலை மலரும்!

..(ஆணவம்..)

'கோ' என அழுதால் கொண்டுவர,
கொற்றவ நிலையோ தேடிவரும்?
'தூ' என உலகம் காறி விழும்,
துலங்கிய கால்கள் சாய்ந்து விடும்!

..(ஆணவம்..)

உறவுகள் உள்ளத்தின் கண்ணாடி;
உன்னத நினைவுகளின்சுமைதாங்கி!
கனவுகள் உறவின் விழுதுகளாம்!

கவிஞர் கவிவளவன்

12.04.2013 - (23.15)

## 6.ஓ! கனவுகளே!..

கனவுகள் இங்கே கலைகிறது
காலம் எனகொரு போதி மரம்
நனவுகள் யாவும் உறக்கமிடும்
கனவுகள் தானே எரிந்து விழும்
(கனவுகள்..)

தத்தையின் மனம்போல் காதல் ரசம்
தலைவனின் மனமாய் ஊமை யுகம்
எத்தனை நாள்களில் இந்தமனம்
எத்தனை தடைகளை ஒடித்து விடும்.
(கனவுகள்..)

பித்தனைப் போலே அலைந்திடுமோ
பிரியத்தை மனதுள் வளர்த்ததினால்
பத்தரை மாற்றுத் தங்கமடா
பாருக்கும் ஒருநாள் ஒளியாவேன்.
(கனவுகள்..)

இத்தனைப் பெரிய உலகத்திலே
எத்தனை சிறிய மனிதர்களோ
அத்துனை சிறிய மனிதருக்கும்
ஆயிரமாயிரம் பொய் முகங்கள்.
(கனவுகள்..)

புத்தனைப் போலே புறப்பட்டால்
போதி மரங்களோ நூறு வரும்
சித்திரை நிலவோ என் மனது
சிரித்திடும் போழ்தில் அழுதுவிடும்...
(கனவுகள்..)

**கு.ப. அசோகன்,**

**1986**

## 7. கந்தனைப் பாடு!(கும்மி)

உள்ளமெலாம் துள்ளுதம்மா - இந்த
உண்மையைச் சொல்ல வேணுமம்மா
கள்ளமில்லா பிள்ளையம்மா - அவன்
கார்த்திகை ஈந்தச் செல்வனம்மா
குன்றமெல்லாம் அவன் தேசமம்மா - வளர்
கொள்கையினால் அவன் தமிழனம்மா
பெற்றவரால் கோபம் கொண்டானோ - அந்தக்
குன்றினிலேறி நின்றானோ!

உற்ற துயரெல்லாம் நீக்கிடுவான் - நல்ல
உயர்புகழ்தனைச் சேர்த்திடுவான்
கேட்பவை யாவும் அளித்திடுவான் - துயர்
கேடுகள் யாவும் போக்கிடுவான்!

வானவர் துயர்தனைக் களைந்தவனாம் - சீர்
வையத்தில் வாழ்வோரைக் காப்பவனாம்
தந்தைக்கே மந்திரம் சொன்னவனாம் - அந்த
தமிழ்க் குறவள்ளியை மணந்தவனாம்!

தீமைகள் யாவும் தீய்ந்திடவே - இந்த
சேயோன் தன்னை வேண்டிடுவோம்.
கண்டிடும் காட்சிகள் யாவிலுமே - அந்த
கந்தன் சீரடி போற்றிடுவோம்!
பொங்குமாம் இன்பங்கள் பலகோடி - அந்தப்
புண்ணியம் யாவுமே கொண்டிடலாம்
குன்றினில் வாழ்வானைக் கும்பிடுவோம் - இந்த
குவலயம் போற்ற வாழ்ந்திடுவோம்!

கு. ப .அசோகன்,
01-03-2001, 4.30 P.M.

# 8.உறுதி கொள்வோம்!

சாதிச் சங்கங்கள் தேவையா? இந்த மண்ணில்
சமத்துவம் என்பது வெறும் பொய்யா?!
ஏழைக்கு ஒரு சாதி உண்டோ ? இங்கு
ஏழ்மையே தனிச்சாதி அன்றோ!

சாதிச் சங்கங்கள்...)

இருப்பவர் வாழ்வதும்;
ஏழைகள் தவிப்பதும்,
நிரந்தரமானது அன்றோ ? இங்கு
நிரந்தரமானது அன்றோ!

(சாதிச் சங்கங்கள்...)

காலையும் மாலையும்;
உரைக்கின்ற நெருப்பில்,
உதிர்க்கின்ற வியர்வையில் ? தனிச்
சாதிகள் ஏதும் உண்டோ?

(சாதிச் சங்கங்கள்...)

கோழைகள் அழுவதும்;
குள்ளநரிகள் வளர்வதும்;
மானுடம் அழிக்க வந்த சாதியோ ? இங்கு
மனிதர்கள் யாரும் இல்லையோ!

(சாதிச் சங்கங்கள்...)

தீயவர் தீய்ந்திட,
தீமைகள் அழிந்திட,
கொடுவா[1]ளை எடுப்போம் ? இந்தக்
கொடுமைகள் நீங்க உழைப்போம்!

(சாதிச் சங்கங்கள்...)

கவிஞர் கவிவளவன்

(பிப்ரவரி 1998)

# ௯.மழை

முட்டுது முட்டுது மேகம் ? அங்கே
மூடிக்கிடக்குது வானம்

கொட்டுது கொட்டுது மேகம் ? மழைப்
பூவைக் கொட்டுது மேகம்

தட்டுது தட்டுது தாளம் ? நீர்
தரையில் பட்டதும் தாளம்

வெட்டுது வெட்டுது மேகம் ? மின்னல்
வெளிச்சம் காட்டுது வானம்

கொட்டுது கொட்டு மேகம் ? மழைப்
பூவைக் கொட்டுது மேகம்

விட்டது விட்டது தொல்லை ? தண்ணீர்
பஞ்சம் என்பது இல்லை

முட்டுது முட்டுது மேகம் ? அங்கே
மூடிக்கிடக்குது வானம்

கெட்டது கெட்டது காலம் ? மழையால்
கண்டிடும் பயிர்கள் நாசம்.

வெட்டுது வெட்டுது மேகம் ? மின்னல்
வெளிச்சம் காட்டுது வானம்

பட்டது பட்டது போதும் ? மனிதா
பாரினில் மழைதான் தீதா?

கு.ப. அசோகன்

## 10.தண்டனை!

செய்யாத தவறுக்கு ஒரு தண்டனையோ - இது
சிந்தை இல்லாதோர் செய்த நிந்தனையோ!
மனமாளும் இறையே நீ காண்பாய் - இந்த
மனம் சூழும் வேதனையைக் கேளாய்!

பிடிவாதம் கொண்டொரு மதியாலே
புனைகதைகள் நூறுதனை சரியென்பார்;
சதியாளர் மனம் கேட்டு, சாதனையாய்
வேதனையை எனக்களித்தார்;
மதியாரோ 'மா'நிலத்தின் தருமத்தில்
மனம் கொள்ளும் மாந்தரையே! (செய்யாத..)

--வேறு--

இறவாத புகழ் வேண்டாம் இறைவா - இம்மண்ணில்
நிலைபெற்ற பெரும் சூழ்ச்சி நிறை கொள்ளும் வகை தன்னில்,
அதிகார கரந்தன்னில் அவதியுறும் நிலை வேண்டாம்!
(செய்யாத..)

--வேறு--

யான்செய்த தவறொன்றை எனக்கு நீ யுரைத்தால்,
நிலை கொள்வேன் இறைவா - ஏனிந்த சூழ்ச்சி வலை?
யான் செய்த தவறென்ன கூறாயோ இறைவா!
(செய்யாத..)

--வேறு--

அவதியுறும் மாந்தருக்கு ஆறுதலை தானளிக்கும்;
கொடையான மனந்தன்னை எனக்களித்தாய்!
கரையாத செல்வமென கவிபுனைய எனைவைத்தாய்
காண்பதெல்லாம் இறையென்று காணும் மனம் கொடுத்தாய்
(செய்யாத..)

--வேறு--

வேதனையை நீக்கிவிடு இறைவா - மனம் தன்னில்
இந்தத் தீராத வேதனையை நீக்கிவிடு!!
வீணான மனம் கொண்டாரோ - இந்த

அரசாளும் வித்தகர்கள்தாமும்; - இது ஓர்
செயலிழந்த 'அதிகார' இயன்நிலையோ!

(செய்யாத..)

நீ அறியா நீதியுண்டோ நானிலத்தில் - இந்த
நெறியாளர் தீ மனதில் பகையுண்டோ!
ஏனிந்த கூத்தோ எனையாளும் இறையே!

**-- கு.ப.அசோகன்,**

14-10-2012

## 11.முதல் பார்வையில் வரும் காதல்

கண்ணில் நூறு கவிதை சொல்லும்;
மண்ணில் பிறந்த தேவதையோ!
பண்ணில் ஆயிரம் இசை கூட்டும்,
வண்ணம் தீட்டிய பேரெழிலோ!

-வெறு-

ஓசை கொஞ்சும் மொழி இன்றி,
ஆசையை என்னுள் விதைக்க வந்தாள்!
பாசம் நிறைந்த பார்வைகளோ,
நேசம் மிகுந்த காதல் தரும்!

வானகம் சூடிய தேவதையோ!
வையகம் காணா பேரெழிலோ / பெருங்கனவோ!
பூமழை தூவி நெஞ்சத்தில்,
புதுமைகள் செய்திட கனா கண்டேன்!

தேடிய மனத்தில் தெளிவு கொண்டேன்;
நாடிய கண்களில் காதல் ரசம்!
சூடிய இன்பம் துள்ளி எழும்!

■ **கவிஞர் கவிவளவன்**

## 12.Impressing a Girl

கண்களில் பிறக்கும் ஒளியாவேன்;
காற்றினில் வளரும் தீயாவேன்!
மண்பதை போற்றும் மரமாவேன்!
மானுடம் தழைக்க துணையாவேன்!

-வேறு-

காதலின் சுடரே கண்மணியே!
கானகம் தேடியவிழி யழகே!
மாதவம் செய்தே பிறந்திட்ட,
மன்மதன் யானே துணையாவேன்!

-வேறு-

திங்களின் ஒளியை அறியாயோ!
தேய்ந்தே வளர்வதைக் காணாயோ!
மங்கல வாழ்வும் மணிமுடியும்;
மன்மதன் தானே நிறை செய்வான்!

மண்பதை யாவும் துணை செய்ய,
பெண்ணே என்னுடன் கரம்சேர்வாய்!
பெருமைகள் காத்து வாழ்ந்திடவே!

**--- கவிஞர் கவிவளவன்**

# 13. Making realization

அறிவின் சுடராய் மனமிருந்தால்,
ஆற்றலின் பயனாய் வாழ்விருக்கும்!
மாற்றம் என்பது நியதி யென்றால்,
மானுட வாழ்வின் நிலையதுவே!

-வேறு—
சுற்றிச் சுழலும் வாழ்க்கை இதில்,
பற்றிக் கொள்ளும் மனக் கணக்கில்,
எத்துனை கோணப் பார்வைகளோ!
அத்துனை வண்ணக் கோலங்களே!

நேற்றும் இன்றும் நாளயுமாய்,
நித்தமும் தேடும் போர்முனையாய்,
சத்தம் மிகுந்த சரித்திரங்கள்;
சடுதியில் மாறிய நிலை காண்பாய்!

வெற்றியும் தோல்வியும் வேறல்ல,
சுற்றிய வலையில் நீ விழுந்தாய்!
கற்று நல் வாழ்வில் கரைசேர்வாய்!

--- **கவிஞர் கவிவளவன்**

## 14.போனால் வராது!

போனால் உயிரும் வராது - அது
போகுமிடம் யாருக்கும் தெரியாது!
தானாய் வந்ததும் இல்லையடா - அது
தங்குவது என்றும் இல்லையடா!

வீணே பிறக்கும் ஆணவமும்,
விழுதாய் உயிருடன் பின்வருமோ!
ஆணையிட்டால் நடத்திவிட,
அடுத்து எதுதான் துணையுண்டு?
( ...போனால்)

ஆயிரம் பிறைகள் கண்டாலும்;
அடுத்து ஒருநாள் பிரிந்து விடும்!
உயிருக்கு ஏது அடையாளம்?
உன்மத்த உடலே கலனாகும்!
( ...போனால்)

உலகில் யாவையும் நேசித்தால்,
உன்னதமாகும் வாழ்நாளே!
நாளை யென்பதை யாரறிவார்?
நல்லதை எண்ணி மனந்திருந்து!
(..போனால்)

அல்லவை எல்லாம் புறந்தள்ள;
அறிவால் உண்மைத் துலங்கி விடும்!
(..போனால்)

கவிஞர் கவிவளவன் 01-12-2019 - 2 PM

## 15. வண்ணமாய் வண்ணமாய்

வண்ணமாய் வண்ணமாய் ஒளிருது!
வஞ்சிக் கொடியிடை துள்ளுது!
கண்களும் கண்களும் சேருது!
காதல் என்றேதான் கூறுது!
(வண்ணமாய்...)

மின்னலும் மின்னலும் வளர்ந்திட
மேகம் மழையைத் தூவுது!
கன்னமும் கன்னமும் சேர்ந்திட
கண்களும் இமையை மூடுது!
(வண்ணமாய்...)

இதழும் இதழும் துடித்திட
இடைவெளியின்றிப் போகுது!
இதயமும் இதயமும் துடித்திட
இன்ப வெள்ளம் புரளுது!
(வண்ணமாய்...)

கைகளும் கைகளும் கோத்திட
காற்றும் விலகி ஓடுது !...
மைவிழி மைவிழி மயங்கிட
மன்மத பானம் கலக்குது !
(வண்ணமாய்...)

இளமை இளமை அழைத்திட
இன்பம் யாவும் கொடுத்திட
காதல் தேரில் ஏறினோர்
கரையைத் தானும் சேர்வரோ!
(வண்ணமாய்...)

**கு. ப. அசோகன், 1996**

## 16.பாவேந்தர் பாரதி தாசன்!

கும்மியடிப் பெண்ணே கும்மியடி – இந்தக்
கோலமகன் பேரைச் சொல்லியடி!
வண்ணத் தமிழிலேப் பாட வந்தான் – பலர்
வாழும் வழியினைக் கூறி நின்றான்!
தேசம் விரும்பிய தமிழ் மகனாம் – அந்தத்
தெய்வம் அருளிய நன்மகனாம்!
பாசம் நிரம்பியக் கலை மகனாம் – இந்தப்
பாரினில் இவனொரு ஒளிச் சுடராம்!

புதுவை நகரினில் பிறந்தவனாம் – பலப்
புதுமைகள் செய்திட வந்தவனாம்!
எட்டயபுரத்து மாமணியாம் – அவன்
சாலையில் படித்து வளர்ந்தவனாம்!
பெட்டை எனச் சொல்லும் பெண்ணினத்தை – நன்குப்
பேணி வளர்த்திடச் சொன்னவனாம்!
குட்டைக் குணங்கொண்ட மாந்தருக்குப் – பல
புத்திமதிகளைச் சொன்னவனாம்!

ஏழை எளியவர்ப் பாட்டாளி – இவர்
யாவர்க்கும் ஒளியேற்ற வந்தவனாம்!
கோழை மாந்தரின் மனந்திருந்த – பல
கோடி வழிகளைத் தந்தவனாம்!
சிந்துக்குத் தந்தையாய் வந்தவனாம்! – பலர்
சிந்தைக் கவர்ந்திட வாழ்ந்தவனாம்!
சோலை அழகினைக் கூறுகையில் – அதனைச்
செப்பம் செய்தாரை ஏற்றினானே!

காலைக் குயிலின் ஓசையிலே – அந்தக்
காதற்குயிலினை உசுப்பி வைத்தான்!
சோலைக் குயிலினைப் போல வந்தான் – பலச்
சோலை வளங்களைப் பாடி நின்றான்!
கூவிடும் போது பாரதி தாசனாகும் – இவன்
கனகச் சுப்பு ரத்தினமாம்!
(பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் கடற்கரைக் கவியரங்கில் பாடியது)
19-10-1992

## 17. எதுதான் நிலையோ!

தேடியதும் சொந்தமல்ல; தேடாததும் நன்மையல்ல!
கூடியது வாழ்க்கையல்ல; கூடுவதும் சொந்தமல்ல!
நாடியதும் நன்மையல்ல; நாடாததும் தீமையல்ல!
பாடியது மொழியும் அல்ல; கூடாதது அறிவும் அல்ல!

காட்டுக்கு நூறுவழி யுண்டு – அந்தக்
காதலுக்கு வேறு வழி ஏது?
பாட்டுக்கு இலக்கணமும் உண்டு,
பாவைக்குத் தலைக்கனமும் உண்டு!

பூட்டுக்குச் சாவியது வேண்டும் – நல்ல
புலமைக்கு அறிவதுவும் வேண்டும்!
வாக்குக்கு விலையாகும் பணமே;
போக்கிவிடும் வாழ்க்கையதன் நிலையே!

உறவினில் ஆயிரம் கனவுகளை,
        உள்ளத்தில் நானும் தேக்கி வைத்தேன்!
அறமது வாழ்க்கையின் கலனென்றால்,
        அறிவது அதனின் செயலாகும்!
பிறர்மனம் பேதமைத் தனைக் காட்டும்;
        பிரியத்தின் அளவு பணமாகும்!
திறண் என்று சொல்வதற்கு ஏதுமில்லை!
        திருந்திய உள்ளத்தின் அளவென்ன?

*21-04-2020 (11.15 பி.எம்.)*

## 18. மண்ணில் யானோர் மகுடம்!

மண்ணில் யானோர் மகுடமடா!
மனிதம் வாழ்த்தும் தலைவனடா!!
எண்ணம் யாவும் கவிதையடா!
ஏற்றிய அறிவின் சூரனடா!

காலம் எனக்கும் தாளமிடும்!
கவிதை வந்தேக் கோலமிடும்!
வானம் தானே மழை பொழியும்!
வையகம் அங்கே செழித்து எழும்!
(மண்ணில் யானோர்...)

உறவுகள் எல்லாம் பகைமையடா!
உரிமைகள் எல்லாம் பொய்மையடா!
(மண்ணில் யானோர்...)

காவியம் பாடும் தலைவனெனைக்
கற்பனைச் சூடும் கவிஞனெனை;
மேவிய உலகம் உள்ளவரை,
மேலெனப் போற்றக் காண்பீரே!
(மண்ணில் யானோர்...)

**19-01-1993**

## 19. என்றன் இனியவளே!

எண்ணம் நிறைக்கும் என்றன் இனியவளே!
கண்களின் சிரிப்பில் காதலைச் சொன்னவளே!
பெண்மையின் அழகில் பேரெழில் கொண்டவளே!

பெண்: கனவும் நிறைந்தது காதலும் வளர்ந்தது
காலம் மாறுதையா!
மனமோ அழுகுது! மாற்றான் வருவது;
மங்கலம் இல்லை யையா!

ஆண்: தேனாய் நிறைந்த நறுந் தெவிட்டா மனத்தவளே!
ஏதடி சொன்னாய் எனக்கொன்றும் புரியலையே!

பெண்: புதிதாய் ஒருவன் புறப்பட்டு வாரானே!
போகையில் என்னைக் கொத்திப் போவானே!
ஆனால், நானென் ஆசையத் தொலைப்பேனோ!
வீணாய் மண்ணில் வாழாதிருக்க உயிரை
விடுவேனே!

ஆண்: போனால் கிடைக்கும் புளியங் கொம்போ
வாழ்க்கையது?
வீணாய் வருந்தி வேதனைக் கொண்டு மனத்தை
இழக்காதே!
என்றன் உயிரும் மண்ணில் உடனே வீழ்ந்து
போகுமடி!

இருவரும்:
ஆயிரம் கனவுகள் தினம் வெண்டும்! – அதில்
ஆசையை வளர்க்கின்ற மனம் வேண்டும்!
போய்விடும் துயரங்கள் தான் வேண்டும் – மனம்
பொலிகின்ற அன்பைப் பெற வேண்டும்!

## 20. மானுட அடிமைகள்!

இங்கே வந்திருக்கும் யாவரையும் வரவேற்கும் (போம்)
அன்பைத் தந்திருக்கும் யாவரையும் கை தூக்கி(க)

பொன்னுமணி ரத்தினங்கள் பொலிந்திருக்கும்
கண்ணுமணி போல் வளர்க்கும் அன்பிருக்கும்
எண்ணமணி அத்துனையும் தாலாட்டும்
சின்னமணி ஒளிசேர்க்கும் சீராட்டம்
(இங்கே)
தத்திதத்தி பிள்ளையதும் நடைபோட்டு,
தன்வயதைச் சொல்லிவிடும் ஓராண்டு!
முத்து முத்து புன்னகைக்கும் போராட்ட(மா)ம்;
முடியாது மனிதக் கடல் நடை போடும்!
(இங்கே)
காதலுக்கு கதைசொல்லி களிப்படைவோம்!
கன்னியரின் மனங்கூட்டிச் சிரிப்படைவோம்!
நால்வருமே நடைபயின்று வந்து விட்டார்!
நல்ல பலச் சீராட்டைத் தந்து விட்டார்!

ஆனபல அன்பிருந்தும் நெஞ்சுக்குள்ளே,
அன்பான காதலுக்கே ஏக்கம் வரும்!
(இங்கே)
அத்துனையும் மானுடரின் தவக்கோலம்!
அன்பிருந்தால் அடைகின்ற எழிற்கோலம்!
எத்துனை முறை சொன்னாலும் சலிக்காது!
உங்கள் உள்ளத்திலே காதல் கதை இனிக்காது!

மனிதராக மனந்திருந்தி,
மற்றவரைச் சேர்த்தணைத்து;
வாழுகின்ற வாழ்க்கையது வாழ்க்கை!
மருவில்லா உண்மையிதை
மனந்திறந்துச் சொல்லிவந்தோம்!
மகத்துவமாய் மானுட அடிமைகளாய்!

## 21. வாழ்க்கை வாழத்தானே!

வாழைமரம் போலிருந்தால் வாழ்க்கையிலே துன்பமில்லே!
கோழைமனம் தீக்குளிக்க கொல்லைபுரம் தேடாது!
வாழையதும் வாழும் காலம் கொஞ்சமே ஆனாலும்!
தாழைமடல் தண்டுமுதல் அத்துனையும் தந்துவிட்டுப்போகும்!

வீழும்வரை மண்ணிலந்த வீராப்பெதும் வேண்டாமே!
தாழும் மனம் என்றும் தளராது வானின் வழி போகும்!
சூழும் மகிழ்ச்சி யாவுந்தான் தொடருவது இல்லையே!
தாழும் நிலை யாவருக்கும் தொடர்வதும் இல்லையே!
(வாழைமரம்...)

ஆழாக்கு அரிசியிலும் அஞ்சு பேருக்குச் சமைச்சிடலாம்!
பாழாகும் மனக்கூச்சல் பக்கத்துலே வரவேண்டாம்!
போராடும் வாழ்வினிலே பொழுதைநீ சாய்க்காதே!
தேரோடும் வீதியெல்லாம் தினமொரு கதை சொல்லும்!
(வாழைமரம்...)

மாறாத புண் எதுவும் மனத்தில் வேண்டாமே!
ஆறாத வடுக்களாய் அவை ஆகிட வேண்டாமே!
போராடும் மனமென்றும் உண்மையதை அறியாது!
புரியாத புனைக்கதைகள் செய்து கலக்கமுறும்!
(வாழைமரம்...)

வாழ்கையிது அற்புதமே வரவுமில்லே செலவுமில்லே!
சூழ்ச்சிகளில் சூழாது சோர்வின்றி நாம் வாழ்வோமே!

--கவிஞர் கவிவளவன்
**24-12-2021 ( 12.45 பி.எம்.)**

# 22. மகிழ்ந்து வாழுவோம்!

--பல்லவி—

கண்ணில் ஒரு மின்னல் வந்து காதலென்று சேதி சொன்னதோ!
பண்ணில் விழும் இசை நிறைந்து பாடலாகும் நிலையைக் கொண்டதோ!
உண்மையிதில் உலகமதும் உறங்கிப் போகும் காலம் வந்ததோ!
தண்மையினால் நன்மைதனை நாமும் தேடிச் செல்வோமோ!

உள்ளமதில் ஒளிபிறக்க உவகை கொள்ளுவோம்!
கள்ளமில்லா அன்புதனை காட்டி மகிழுவோம்!
வள்ளல் குணம் கொண்டோரை வளர்த்து மகிழுவோம்!
(கண்ணில்..)

வாழும் உயிர் அத்துனையும் அணைந்து கொள்ளுவோம்!
தாழும் நிலை யாவற்றுக்கும் இல்லையென்றோதுவோம்!
வீழும் மனப் போராட்டங்கள் விரைந்து நீக்குவோம்!
(கண்ணில்..)

நாமும் நல்ல மாந்தரென்று மண்ணில் வாழுவோம்!
தாவும் அன்பில் நல்ல கலைகள் நாளும் தேற்றுவோம்!
மூளும் இன்பத்தில் அன்பில் திளைந்து வாழுவோம்!
(கண்ணில்..)

மண்ணில் வாழும் யாவரையும் அணைந்து கொள்ளுவோம்!
மானிட வாழ்வின் பெருமைதன்னை உலகில் ஏற்றுவோம்!
-கவிஞர் கவிவளவன் 31-12-2021 (11.45 பி.எம்.)

23. இறை வழியில் நின்று; மறை வழியைக் கண்டு;
அறம் கொண்டு வாழ; உளமுருகி வேண்டு,
வரம் ஒன்று கேளு; வளம் பெற்று வாழு!/வாழ்வாய்!

**-பல்லவி-**

ஆரம்பம் ஆவதும் ஆனந்தம் தருவரும் அன்னையின்
மடியினிலே!
கூடிடும் கல்வியும் தேடிடும் செல்வமும் தந்தையின்
பொருளினிலே!
நாடிடும் உலகமும் உனதடியே தாளிடும் இன்பமும் பூமழையே!
பாடிடும் கானமும் கைவருமே ஆடிடும் உள்ளமும் மகிழ்வினிலே!
அன்பால் உலகை அனைத்திடுவாய்!
பண்பால் பசிப்பிணி போக்கிடுவாய்!

**-சரணம்-**

விந்தையான உலகினிலே! விலைபோகும் சூழலிலே!
சொந்தமெலாம் விலகிடுமே! இளையவனே நீயறிவாய்!
பந்தமென மனந்தனிலே பழமைதனக் காத்திடுவாய்!

சாதனை செய்ய பிறந்தவனே!
மாறிடும் உலகியல் நீயறிவாய்!
கூறிடும் பொய்களைக் களைந்திடுவாய்!
கூவிடும் உன்மனம் நீதியினை!
தாவிடும் மனந்தைச் சேர்த்திடுவாய்!

தாளாத நிலைதன்னை நீக்கிடுவாய்!
தளராத தூணாக நிலைத்திடுவாய்!
சீராளன் உன்னோடு துணை வரவே,
விழுதாக சிலரை நீ ஆக்கிடுவாய்!/தந்திடுவாய்/பெற்றிடுவாய்

ஆயிரம் கரம் கொண்ட ஆதவனாய்;
பாயிரம் கொண்டிடும் தலைமகனாய்;
நாளைய உலகில் வாழ்ந்திடுவாய்,
நானிலம் பொற்றிடும் உன் பெருமை/பெயரே! **- கவிவளவன்**

## 24. சிந்தையே செல்வமாகும்!

தத்தி தத்தி ஓடிவரும் தவ(க்க)ளை – அதற்கு
தத்துவமாய் வாழ்விலேதும் இருக்கல!/இல்லே
சுத்தி சுத்தி ஓடிவரும் எறும்பு – அதற்கு
சொத்தாகப் பெருங்கூட்டம் இருக்கு!

கத்தி கத்திப் போகுமந்த காகம் – நாளும்
சுற்றத்தை தானே தேடியது கரையும்!
தன்னினத்தை ஏசுமந்த நாயும் – என்றும்
மானிடர்க்கு நல்ல துணையாமோ!

முத்தாக நூறுகதை பிறக்கும் – அதன்
முடிவுரையில் ஏதும் சுகமில்லே!

தத்துவமாய் வாழ்க்கை இதை எண்ணி
தள்ளாடி போகாதே மனமே!
சித்திரை போல் வைகாசி இதைச்
சிந்தித்தால் வாழ்வில் துன்பமேது நீயோசி!

மத்தவரைப் பார்க்காதே மடிமீதில் சுமக்காதே!
எத்திசையும் பார்க்காதே எவரையும் நீ தேடாதே!
தோப்பாகத் தெரிந்தாலும் அத்துனையும் தனிமரமே!
எப்போதும் மண்ணில் நீ இறுமாந்து நில்லாதே!

துள்ளாதே துவளாதே துடித்து மடியாதே!
பள்ளமும் மேடுமே பாதைவழி தானாக,
எள்ளி நகையாடி எவரையும் நீ வருத்தாதே!
அள்ளக் குறையாத அன்பை நீ தந்தாலே,

எக்காலும் மகிழ்ந்திடலாம்!
எந்நிலையும் சுகமாகும்!
*02-01-2021 (10.40 பி.எம்.)*

## - 25. வாழ்க்கையே பாடம்!

- *பல்லவி*-

மண்ணிலே பிறந்ததெல்லாம் மடிவதே வாழ்க்கை யென்றால்,
பொன்னான வாழ்க்கையென்று பூரித்து வாழ்வதேனோ?
கண்ணிலே மணியாக காதலித்துக் கைபிடித்தேன்!
விண்ணென்று பறந்தாளே வேதனையைத்தான் தந்தாளே!

*சரணம் 1*

கண்ணுக்குக் கண்ணாக காட்சிதரும் பிள்ளையது,
மண்ணிலே வந்துவிழும் மகிழ்ச்சியிலே நானிருந்தேன்!
என்னவளும் போனாளே எனைவிட்டுப் பொனாளே!

*சரணம் 2*

இரத்தம் தேடி ஓடினேனே அங்கு நேரமாகிப் போச்சுதடி!
வேடிக்கையின்னு சொல்லி என் வேலையைத்தான்
கெடுத்தாங்க!
ஆடியிலே காத்தாக அந்த எமனும்தான் வந்தானோ!

*சரணம் 3*

பாவியாய் என்னவளே நீயும் பறந்து போனாயோ!
கேவியழுதாலும் கேட்டுவிட யார் இருக்கா?
கூவியழுதாலும் கொண்ட உயிர் தருவானோ?

*சரணம் 4*

போரிட மறந்தாயோ பிரியத்தைத் துறந்தாயோ!
ஆறாத வடுவாக ஆனதடி என்மனசு!
ஆராரோ பாடிவிட ஆனந்தமாய்க் காத்திருந்தேன்!

*முடிப்பு*

போவதற்கே படைப்பானோ அந்த போல்லாத இறையவனோ!
போவதினால் இந்த வாழ்கையிலே ஆவதுதான் என்னதுவோ!

- ***கவிஞர் கவிவளவன்*** 15-01-2022 (09.45 PM)

## 26. ஏற்று வாழ்வோம்!

வானத்துக்கும் பூமிக்கும் இடையே ஆடுவது நம் வாழ்க்கை!
காற்றும் மழையும் தானாய் நிறைய ஓடும் இந்த வாழ்க்கை!
காணும் அழகில் கண்கள் நிறைய தொடரும் இந்த வாழ்க்கை!
காலைக்கும் மாலைக்கும் இடைபட்ட காலம் நம் கையில்!

பூமியின் அழகே எனதென்று இருந்தேன்!
பொங்கும் அன்பில் பொலிந்து வாழ்ந்தேன்!
தங்கும் இன்பம் நாளும் என்றே,
தப்பியக் கணக்கில் இன்று தடுக்கி விழுந்தேன்!

இப்படியாகும் வாழ்கை என்றே,
எங்கே நாங்கள் நினைத்த இருந்தோம்!
கையை நழுவிடும் காசை போலே,
யாவும் சரிந்த கோலம் இன்று!
இதுதான் வாழ்வோ இதுதான் நிலையோ!
இறைவன் என்பவன் யாரோ எவரோ?
ஏனிந்தக் கூத்தோ எதனால் வந்ததோ?
- **கவிவளவன்** 23-01-2022 (11.55 பி.எம்)

27. தேடுவதும் ஓடுவதும் தெய்வம் தந்த விதியோ!
ஆடுவதும் பாடுவதும் காலம் செய்யும் சதியோ!
கூடியதை இழப்பதுவும் அந்த மாயவனின் விதியோ!
நாடியதை நாமிழக்கும் நேரமதை அறியோம்!

கூடுவதைக் கொண்டாடும் கொள்கைதனைச் செய்வோம்!
வாடும்வகை அறியாத வாழ்க்கைதனில் நிறைவோம்!
தேடுவதில் நிறைவெய்தி திகழும் இன்பம் கொள்வோம்!
வாடுவதும் தேடுவதும் வாழ்க்கையிதில் வேண்டாம்!

ஓடுகையில் உலகாளும் உன்னதத்தை அறிவோம்!
நாடியதும் தேடியதும் நம்மோடு நிலைத்திடுமோ!
வாடாத பெருமனத்ததை வாழ்கையதில் செய்வோம்!
ஓடும்வரை உலகினிலே ஒய்யாரமாய் வாழ்வோம்!
- **கவிவளவன்** 08-02-2022 (05.35 PM)

## 28. கண்களின் வழியே!

கண்களின் வழியே காட்சிப் பிழை
காணும் மனத்துக்கு என்ன நிலை?
எண்ணம் எழுதும் இன்பமெல்லாம்,
இடரில்லா மனத்தின் கால நிலை!

உள்ளம் தேடும் ஊமை விழி,
கள்ளமில்லா அன்பின் வழி!
பள்ளம் நோக்கி ஓடுவதும்
தெள்ளத் தெளிந்த நீரேதான்!

அள்ளும் அழகைப் பருகுங்கள்!
துள்ளும் மனத்தைச் சூடுங்கள்!
வெள்ளை யுள்ளம் கொள்ளுங்கள்!
விரும்பிய படிநாம் வாழலாமே!
- கவிவளவன் 08-02-2022 (05.15 PM)

----- ------------------------------------------------

29. தேடும் கனவுகளில் ஆனந்த நிலையுண்டோ!
ஆடும் மனம் நிறைந்து ஆளுவதும் எந்நாளோ?
பாடும் குயிலினங்கள் பார்வைக்கு அழகாமோ?
கூடும் யாவிலுமே குறைகளும் தானிருக்கும்!

வாடா மனமே நீ வையத்தை ஆள்வாயோ!
கூடா நட்பெல்லாம் கூடி நீயும் போவாயோ!

ஓடும் நதிவழியில் ஒய்யார மீன் துள்ளும்!
பாடும் வானம்பாடி பார்வைக்கு தெரியாதோ!

நாடாத மனந்தன்னில் நன்மைகள் பிறக்காது!
தேடாத உறவுகள் என்றுமே நிலைக்காது!
தேடுவோம் யாவிலுமே தீமையில்லா நல்லுறவை
பாடுவோம் நாளும்தான் பயன்கொண்ட அன்பாலே!
- கவிவளவன் 08-02-2022 (04.45 PM)

# 30. பப் சாங்க்

தாறுமாறா ஆடாதே தாளம் கெட்டு நிக்காதே!
கூறு கெட்ட மனுஷனா குழம்பிப் போயி ஆடாத!

வேறு வேலை இருக்கா விலகிப் போயி நில்லு!
யாரு என்ன கேப்பா என்ன வேணும் சொல்லு!

பாட்டுதாளம் ஆனாலும் பக்குவமும் வேணுமே!
கூட்ட விட்ட பறவையா கொஞ்சி பாடி ஆடலாம்!
ஆட்டமா நீ ஆடுற அசிங்கமா இல்ல இருக்குது!

கேட்டுகிட்டு நிக்கநான் கிறுக்குபய புள்ளயா!
ஆட்டம் பாட்டம் எல்லாமே ஆனந்தமாகுமே!
பாட்டுபாட நீயும்ந்தான் பக்குவமா வந்திடு!

சரக்குப் போட்டா எப்போதும் சத்தமில்லாம இருக்கனும்!
கிறுக்குப் புடிச்சு ஆடுனா கேவலமா போகாதோ!

ஆட்டம் பாட்டம் எல்லாமே அப்பப்போ வந்திடும்/ஆனந்தமாய் ஆகுமே!
கூட்டுக்குள்ள பூட்டி வெச்சா வியாதிதானே வந்திடும்!
கவிவளவன் 20-02-2022 (11.45 பி.எம்.)

## 31. காற்றடித்து மழைதூவும் ஒரு மாலை!

காத்தடிக்குது! காத்தடிக்குது! கரும்புதோட்டம் சலசலக்க காத்தடிக்குது!
மேகமெல்லாம் ஓடுது! மேகமெல்லாம் ஓடுது, அவை மேலும் கீழும் ஆடுது!
பூவைப் போல மழை விழுது, பொன்னு முகத்துல பூவை போல மழைவிழுந்து,
முத்து முத்தா தெரியுது முகத்திலந்த கண்ணிரண்டும் விழிச்சு விழிச்சு பாக்குது!

என்ன மச்சான் நீயும் என்னைப் பார்த்து பாடுற, ஒன்னும் எனக்கு புரியல!
கண்ணுக்குள்ளே மழை விழுந்து, காத்து சுத்தி அடிக்கையிலே என்னநீ சொல்லுற?
கன்னிப் பெண்ணே மழையிலே காதல் மனம் ஏங்குது! காற்றில் தானும் துள்ளுது!
முத்தாய் விழும் மழையாக நானும் ஆக வேண்டுமாய் முன்னே பின்னே ஏங்குது!

முத்து முத்தாய் ஆகிட மூனு முடிச்சு வேணுமே! முகவரியும் மாறுமே!
கன்னு குட்டி போலே நீயும்  காற்றைக் கண்டு ஓடாதே!
மின்னல் வந்து கண்ணுக்குள்ளே வெட்டிவிடப் போகுது!
மண்ணைப் பார்த்து நடக்கும் போது, மின்னல் என்ன செய்யுமோ!

மின்னல் வந்து உந்தன் மீது மோதிவிட்டுப் போகும் போது,
கன்னம் தொட்ட தண்ணீரோ மாய வண்ணம் காட்டுது!
சும்மா ஏதும் சொல்லிச் சொல்லி சுத்தி சுத்தி வாராதே!
அம்மா, அப்பா பொன்னுநான், நாளைப் பார்த்து நீயும் வா!

காதலைநீ சொன்னதாக கருத்தில் நானும் கொள்ளவா?
ஏதுமிப்போ வேண்டாமென்று எட்டி நீயும் ஓடாதே!
தூது சொன்ன மழைதனையும் பாடிவிட்டுப் போவோமே!

காதிரண்டும் குளிருது, கண்கள் தானே சிலிர்க்குது!

தோளில் கொஞ்சம் சாஞ்சுக்கோ
துவண்டு நீயும் விழாதே!
ஆசைதான் அள்ளுதோ?
நேரம் வரும் பார்த்துப்போம்!
- *கவிவளவன்* 20-03-2022 (9.55PM)

----------------------------------------

## 32. அன்பில் நனையும் காதல்!

கொன்றைப் பூக்கள் மண்ணில் விழுந்து கோலம் போடுதடி!
கன்றாகி மனம்துள்ளி காற்றிலே தன்னிலையை மறக்குதடி!
என்நெஞ்சில் விளையாடும் என்னருமை தேவதையே!

முன்னேதும் கண்டோமோ முகவரியும் அறிந்தோமோ?
என்நினைவில் காதலாகி என்னை நீ தொடர்ந்தாயோ?
கொன்றை பூவிழவும் குதித்து மகிழ்ந்தவுடன் கண்டாயோ?

சரணம்
வென்ற அரசனுக்கே கொன்றை மாலையுண்டு!
மன்றிலிலே ஆடாது மாலையிட்டு யாரழைப்பார்?
மன்றாடிப் பெற்றாயோ மறுபடியும் அழைப்பாரோ?
அன்றலர்ந்த மலரெல்லாம் அழகாக யார் தருவார்?

தென்றலாய் என்மனத்தில் தேவதையே நீ இருக்க,
தென்றலிலே பூமணங்கள் தெருவெங்கும் வீசிவரும்!
அன்றலர்ந்த மலரெல்லாம் அன்பினாலே சரமாகும்!
மன்றாடிப் பெறவில்லை மரியாதையை நீ அறிவாயோ?
*கவிவளவன்* 18-03-2022 (11.10 PM)

**33. சேர்ந்து:** காத்தடிக்குது! காத்தடிக்குது!
கரும்புதோட்டம் சலசலக்க காத்தடிக்குது!
மேகமெல்லாம் ஓடுது! மேகமெல்லாம் ஓடுது,
அவை மேலும் கீழும் ஆடுது!

**ஆண்:** சேலை தன்னை விலக்கிப் போக,
வெட்கம் வந்து கன்னம் சிவக்க,
காத்தடிக்குது! காத்தடிக்குது!
கரும்புத் தோட்டம் சலசலக்க காத்தடிக்குது!
குறுக்கும் நெஞ்சம்தானே,
கொஞ்சிப் பேச துள்ளியோடுது!

**பெண்:** அங்க இங்க பார்க்காதே,
அவசரப்பட்டு திரியாதே!
காத்து தானாய் வீசும் போது,
கலைவதேல்லாம் பார்க்காதே!

**ஆண்:** காத்தடிக்குது! காத்தடிக்குது!
கரும்புத் தோட்டம் சலசலக்க காத்தடிக்குது!
பார்க்கத்தானே கண்ணுரெண்டும்
படைச்சு வெச்சான் மவராசன்!

**பெண்:** ஆசை தோசை அப்பள வடை,
கண்டதெல்லாம் பார்க்கனும்னு
கனாக் கண்டு திரியாதே!

**ஆண்:** கட்டிக்கப் போற போன்னுதானே?
கண்டா என்ன தப்பு சொல்லு?

**பெண்:** காடுவழி நோக்கத்தானே கண்ணு வெச்சான்!
கண்டதெல்லம் பார்க்கறதுக்கா செஞ்சு வெச்சான்!

**ஆண்:** காத்தடிக்குது! காத்தடிக்குது!
கரும்புத் தோட்டம் சலசலக்க காத்தடிக்குது!
கண்ணு ரெண்டும் இல்லாட்டி காதல் ஏது?
காத்து மழை இல்லேன்னா வாழ்க்கை ஏது?

- *கவிஞர் கவிவளவன்* 22-03-2022 (11.45 PM)

## 34. காதல் வரும் வேளையிலே!

மண்ணிலோர் மணிமகுடம் மகிழ்வுடன் தந்தவனே!
பெண்மையின் இலக்கணத்தைப் போற்றிட வந்தவனே!
கண்ணில் வரும் காட்சியிலும் காதலாகி நிற்பவனே!
விண்ணிலே அரசாளும், பொன்னொளியாய் நிறைபவனே!

பெண்ணுக்குப் பெண்ணாக பேதைமையின் மொழியாக,
கண்ணுக்குள் கண்ணாக கார்முகிலின் வடிவாக,
விண்ணுக்கு விளக்கேத்தும் வெய்யோனின் சுடராக,
மண்மீதில் எனை அணைக்க, மகிழ்வோடு நின்றோனே!

தென்றல் வந்து என்னிடத்தில் சேதி சொல்லுமோ!
மன்றில் ஆடும் பூக்கள் உந்தன் பெருமை பேசுமோ!
அன்றலரும் பூக்கள் தாமும் காதல் சொல்லுமோ!
முன்றாம் பிறைகண்டு மகிந்து போவோனும்,

நான்காம் பிறைகண்டு நகர்ந்து கொள்வதேனோ!
வான்மேவும் அழகெல்லாம் வடிவாய் நிறைவதுவோ!
மன்னவனின் கண்ணுக்குள் மகிழ்ந்தாடும் பாவையதோ!
தென்னவனின் அறிவாக, தேர்ந்த சீர் மொழியாமோ!

என்னை அழைக்கின்ற என்னினிய ஆண் மயிலே!
உன்னை அடைந்திடவே யானும் ஓடோடி வந்திடுவேன்!

கவிஞர் கவிவளவன் 10-04-2022 (11 PM)